
# திராவிடத்தால் வாழ்கிறோம்

798

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இந்தியை இங்கு மட்டும் எதிர்க்கவில்லை!

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில், தமிழ்நாட்டில் மூன்றாவது மொழியாக இந்தியைத் திணிக்க, பா.ஜ.க. முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இன்னொரு இந்தி எதிர்ப்புப் போருக்கு தமிழ்நாட்டைத் தள்ளிவிட வேண்டாம் என்று தி.மு.க. எச்சரித்து, ஆதிக்க இந்தியை அண்ட விடாமல் அரணாகத் தடுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வேளையில், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலேயே இந்தித் திணிப்புக்கு எதிரான மனநிலை வலுத்து வருகிறது. மகாராஷ்டிராவில், 'மராத்தி'யை இந்தி விழுங்கிச் செரித்து வருவது அனைவரும் அறிந்ததே. சமீபத்தில், மும்பையில் ஒரு வணிக நிறுவனத்திற்குப் பொருள் வாங்கச் சென்ற மராத்தியரை 'இந்தியில் பேசு' என வணிகர் மிரட்ட, வாக்குவாதம் முற்றி கைகலப்பானது. இதுதொடர்பாக, கருத்து தெரிவித்த 'நவ நிர்மாண் சேனா'வின் தலைவர் ராஜ்தாக்கரே, “மகாராஷ்டிரா மாநிலத்தில் மாராத்திய மொழியைப் பேச மறுத்தால், அவர்களின் கன்னத்தில் அறையுங்கள். இந்தி ஆதிக்கம் இங்கே அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்தியைத் தைரியமாக எதிர்க்கிறார்கள்''என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மகாராஷ்டிராவை ஆளும் பா.ஜ.க. கூட்டணியின் முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் அண்மையில், அரசு அலுவலகங்களில் மராட்டிய மொழியைத்தான் முதன்மையாகப் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்ததுடன், அலுவலகங்களில் உள்ள கணினியில் மராட்டிய மொழி பயன்பாட்டில் இருக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டார். அதேபோல, பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெறும் மேகாலயாவில், அம்மாநில ஆளுநர் 'மக்கள் இந்திக்கு முன்னுரிமை தர வேண்டும்' என்று சமீபத்தில் பேசினார். அதற்கு அம்மாநில அரசிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலேயே இந்திக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது; ஆனால், தமிழ்நாட்டு பா.ஜ.கவினரோ 'முடியாது' என்று தெரிந்தும் மும்மொழி என்ற பெயரில், இந்தியைத் தூக்கி வருகிறார்கள். அவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள உதவுகிறது, அந்தக் கேலிக்கூத்தான முயற்சி!

## ஃப்ளாஷ்பேக்



### சிவகங்கை நகரில், தலைவருக்கு வரவேற்பு!



இ.மதார்

1996-ஆம் ஆண்டு சிவகங்கை நகருக்குப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள, அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர், தற்போதைய கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகை தந்தார். சிவகங்கை நகர 25-வது வார்டு வட்டச் செயலாளராக இருந்த நான் அவருக்குப் பொன்னாடை அணிவித்து, வரவேற்பு கொடுத்தேன். அப்போது, எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. இந்நிகழ்வுக்கு தளபதியுடன், மறைந்த முன்னோடி அன்பில் பொய்யாமொழி அவர்களும் வருகை புரிந்தார். அந்த நாள் என்றைக்கும் எங்கள் நினைவில் நிலைத்திருக்கும்.

– இ.மதார், கழக அவைத் தலைவர், சிவகங்கை நகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நல்வருக

### `அண்ணா கவிதாஞ்சலி' ராயல்டி

1969-ஆம் ஆண்டு அண்ணா மறைந்தபோது, கலைஞர் வானொலியில் வடித்த இரங்கல் கவிதை, 'அண்ணா கவிதாஞ்சலி' என்கிற பெயரில் ரிக்கார்டுகளாக ஏ.வி.எம். நிறுவனம் வெளியிட்டிருந்தது. “அதில் கிடைத்த ராயல்டி தொகை 10 ஆயிரம் ரூபாயை, அண்ணா அவர்களின் குடும்பத்திற்கே ஒப்படைக்கிறேன்” என 1970-இல் தன் பிறந்த நாள் விழாவில் அறிவித்தார், கலைஞர்.

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

4


**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# 'முன்'மாதிரிமங்கலம் ஊரும் - சேரியும் இணைந்தது!



அம்பேத்கரின் 'மகர்' போராட்டத்தை மாதிரிமங்கலத்தில் சத்தமில்லாமல் செய்துகாட்டிய துரைசாமி அத்தோடு நிற்கவில்லை. பண்ணையார்களுக்கு எதிராகவும், பார்ப்பனர்களுக்கு எதிராகவும் தொடர்ந்த சுயமரியாதைப் போராட்டத்தால், 1960-களில் அங்கே இருந்த தலித் மக்கள் இறப்புக்குப் பறை அடிக்கச் செல்வதை நிறுத்தினர். இறந்துபோன மாட்டை தூக்கச் சொல்வதும் வழக்கொழிந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் சட்டை அணிந்தனர், காலில் செருப்பு போட்டனர், ஊர்த்தெருவுக்குள் நடக்கத் தொடங்கினர். குத்தகை பார்த்த பிற்படுத்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்த இருவரை, ராமாமிர்தம் அய்யர் வீட்டு முற்றத்தில் கட்டி வைத்த செய்திகேட்டு, இருவரையும் மீட்ட துரைசாமி, அந்த வீட்டையே கொளுத்தி விட்டார்.

இச்செயல்களால் கொந்தளித்துப்போன பண்ணையார்கள், துரைசாமியோடு நெருக்கமாக இருந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மணிவேலை வெட்டிக் கொன்றனர். அந்தப் பழியை துரைசாமி மீதே போட்டு, சிறையில் தள்ளினர். சட்டப் போராட்டம் நடத்தி, துரைசாமியை மீட்டார் பெரியார். வெளியே வந்து, தன் நண்பர் மணிவேலின் பெயரிலேயே ஆதிக்கவாதிகளுக்கு மரண அடி கொடுத்தார் துரைசாமி.



மாதிரிமங்கலத்தில் ஊரும் சேரியையும் இணைப்பதென்று முடிவெடுத்தார். முதற்கட்டமாக 10 தாழ்த்தப்பட்ட குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, ஊர்த்தெருவுக்கு மத்தியில் மந்தக்கரை என்ற பகுதியில் குடியமர்த்தினார். சமத்துவபுரங்களை தவிர்த்துவிட்டு, இப்படியொரு வரைபடத்தை இந்தியாவில் இன்றும் எங்கும் பார்க்க முடியாது. ஆனால், 60-களிலேயே இதை அதிரடியாக நிகழ்த்திக் காட்டினார். அந்தக் குடியிருப்புக்கு தனது நண்பர் மணிவேல் பெயரைச் சூட்டினார்.

மறுநாள் காலையில் ஊர் கூடி எதிர்க்க, கூட்டத்தில் 200-க்கும் மேற்பட்டோரை ஆயுதங்களோடு நிற்க வைத்துவிட்டு, “வீடில்லாத ஏழைகள் இங்கே குடியேறியதால், யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. யாராவது எதிர்த்தாலோ, எதாவது செய்தாலோ இவர்களுக்காக சிறைக்குப் போவதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை” என்று எச்சரித்தார். என்ன செய்வதென்றே தெரியாமல் கலைந்தது கூட்டம். பாதுகாப்புக்காக சில நாட்களே மணிவேல் நகர் வாசலிலே தூங்கினார் துரைசாமி. அதுநாள் முதல் அவர் 'என்.டி.சாமி' என்றாகிவிட்டார்.

அடுத்து, 1962-இல் ஊராட்சி மன்றத் தலைவராகி, காவிரி நகர், காமராஜர் என்ற புதிய நகர்களை உருவாக்கி, அதில் கன்னியம்மன் தெரு, மேட்டுத்தெரு காலனி மக்களை அங்கு குடியமர்த்தினார். மாதிரி மங்கலத்தில் தனியார் உதவியோடு பள்ளிகளைத் தொடங்கி, பின்னர் அதை அரசே ஏற்று நடத்தும்படி செய்தார். அங்கு பெரும்பாலானோர் படித்திருக்கி றார்கள். என்.டி.சாமியின் வீட்டுத் திருமணத்தில் தாய்மாமன் சீர், தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டிலிருந்து வந்தது.

50 ஆண்டுகளைக் கடந்துவிட்டோம் அங்கிருந்து... 1978-லேயே என்.டி.சாமி மறைந்துவிட்டார். ஆனால், இப்போதும் மாதிரிமங்கலத்தில் நாவிதர், வண்ணார், ஆதிதிராவிடர், வன்னியர், இஸ்லாமியர் சமூகங்கள் ஒன்றாக அருகருகே வசிக்கிறார்கள். அவர்களுக்குள் எந்தவித பேதமும், மோதலும் இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் செத்த மாடு தூக்குவதோ, பறை அடிப்பதோ இன்றும் கிடையாது. அதனால்தான் அது 'முன்'மாதிரி மங்கலம்.

...பயணிப்போம்.


## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

55

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**

# பா.ஜ.க. அரசின் ரத்தம், பச்சைப் பொய்!



***தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக தி.மு.க. தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா விமர்சித்திருக்கிறாரே?***

பச்சைப் பொய்களை மட்டுமே பேசுவது என்பது அமித்ஷா தொடங்கி, அண்ணாமலை வரை பா.ஜ.கவினரின் ரத்தத்தில் ஊறியிருக்கிறது. ஏறத்தாழ 40 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களை வெளியேற்றக்கூடாது என்பதும், அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் சட்டப்பூர்வமான வழியில், குடியுரிமை வழங்க வேண்டும் என்பதும்தான் தி.மு.க.வின் நிலைப்பாடு. இதனை நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கவிஞர் கனிமொழி எம்.பி. வலியுறுத்திப் பேசியபோதுதான், 'தி.மு.க. இதற்கு முன் எதுவும் செய்யவில்லை' என்றார் அமித்ஷா. பா.ஜ.க. அரசு கொண்டு வந்த குடியுரிமைக்கான சி.ஏ.ஏ. திருத்தச் சட்டத்தில், 'இலங்கையைச் சேர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஏன் இடமில்லை' என்று கேட்டு, பாரபட்சமான இந்தச் சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் பேசியவர்கள் தி.மு.க. எம்.பி.க்கள்.

தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு அரசின் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக்குழுவின் துணைத்தலைவருமான டாக்டர் கலாநிதி வீராசாமி, உள்துறை அமைச்சகத்திடம், சி.ஏ.ஏ. திருத்தத்தில் இலங்கைத் தமிழர்களுக்கும் இடமளிக்க வேண்டும் என்பதையும், இந்திய-இலங்கை அரசுகள் இடையிலான 1964 மற்றும் 1972 -ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள இலங்கை மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

> **தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும், உலக வாழ் தமிழர்களுக்கும் எதிராகச் செயல்படுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

கடந்த 4 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற திராவிட மாடல் ஆட்சியின் சார்பில், 106 முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான அடிப்படைத் தேவைகளான வீடு, கல்வி உதவி, தொழில்வாய்ப்பு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்பட்டு வருவதுடன், அவர்களின் குடியுரிமை தொடர்பான முயற்சிகளையும் ஒன்றிய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று சட்டரீதியான முறையில் மேற்கொண்டு வருகிறது.

இது குறித்து, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பொதுத்துறைச் செயலாளர் நந்தகுமார் ஐ.ஏ.எஸ், உள்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார். கடந்த நவம்பர் மாதத்தில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், நீண்டகாலமாகத் தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பாமல் இருப்பதற்கேற்ற வகையில், அவர்களுக்கு நீண்ட கால விசா (LTV) வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி உள்துறை அமைச்சகத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். தனது துறைக்கு அனுப்பப்படும் கடிதங்களைக்கூட உள்துறை அமைச்சர் அமித்ஷா பார்ப்பதில்லை போலும். தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும், உலக வாழ் தமிழர்களுக்கும் எதிராகச் செயல்படுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

...வினா தொடரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131